| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>திரு.மாரிமுத்து<br>த/பெ.முத்துசாமி | அ.வ.எண். 289/2011 | 03.07.2026 |

இ.ம.எண்.21/2026 மனு 21.04.2026 தேதியில் அனுமதிக்கப்பட்டதன் பேரில் வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பி.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) இவ்வழக்கினை நான் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது அப்பாயியின் அம்மா சிவகாமி சொத்தில் பாகம் கோரி தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 செட்டில்மென்ட் ஆவணம் மேற்படி சிவகாமி அம்மாள் அவரது மகள் ஆனந்தாயிக்கு ஏற்படுத்தி கொடுத்தது என்றால் சரிதான். எனக்கு சிவகாமி அம்மாளையோ, அவரது கணவரையோ நேரில் தெரியுமா என்றால் நேரில் தெரியாது. குழந்தையம்மாள் என்பவர் யார் என்றால் மேற்படி ஆனந்தாயிக்கு தங்கை.

2) மேற்படி ஆனந்தாயியின் கணவர் பெயர் என்ன என்றால் பழனியப்பன். மேற்படி குழந்தையம்மாளின் கணவர் பெயர் என்ன என்றால் சிங்காரம். சிங்காரம்– குழந்தையம்மாள் ஆகியோரின் மகன் தான் சாம்பசிவம் என்றால் சரிதான். எனது தாயார் பெயர் என்ன என்றால் சுப்பம்மாள். அகிலாண்டம் என்பவர் யார் என்றால் எனது தந்தையின் தாயார். சிவகாமியம்மாளின் வாரிசு சான்றிதழை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாரிசு சான்றிதழ் இல்லை அதனால் தாக்கல் செய்யவில்லை.

3) வா.சா.ஆ.1 செட்டில்மென்ட் ஆவணத்தில் சிவகாமியம்மாள் ஆனந்தாயிக்கு மட்டுமே சொத்தை பாத்தியப்படுத்தியுள்ளார் என்றாலும், மேற்படி ஆவணத்தில் தனது மூத்த மகள் அகிலாண்டம் குறித்து எதுவும் குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான். சாம்பசிவத்தின் மூத்த மனைவி பெயர் மீனாம்மாள். சாம்பசிவம்–மீனாம்மாளுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 3 மகள்கள், அதில் 2வது மகள் கிருஷ்ணவேணி திருமணமாகாமல் இறந்துவிட்டார். அவர்களில் மூத்த மகள் அன்புமணி இவ்வழக்கில் 5ம் பிரதிவாதி என்றால் சரிதான். அவர்களில் கடைசி மகள் மகாலட்சுமி இவ்வழக்கில் 13ம் பிரதிவாதி என்றால் சரிதான்.

4) மீனம்மாள் காலமான பிறகு மேற்படி சாம்பசிவம் 1ம் பிரதிவாதி சரஸ்வதியை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். சாம்பசிவம்–சரஸ்வதிக்கு பிறந்த பிள்ளைகளே 2, 3 பிரதிவாதிகளான சிவக்குமார், ஜானகி என்றால் சரிதான். மேற்படி குழந்தையம்மாளுக்கு சாம்பசிவத்தை தவிர வேறு மகன் உள்ளாரா என்றால் உள்ளார் அவர் பெயர் நாகராஜ் இவ்வழக்கு 4ம் பிரதிவாதி. மேற்படி குழந்தையம்மாளுக்கு நாகராஜ் என்ற மகன் உள்ளார் என்று இவ்வழக்கு தாக்கல் செய்யும் போது எனக்கு தெரியும் என்றால் மகன் உள்ளது தெரியும், அவர் எங்கு உள்ளார் என்று தெரியாது.

5) இவ்வழக்கு தாக்கல் செய்யும் போது மேற்படி நாகராஜை இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். பின்னர் மேற்படி நாகராஜ் தான் இவ்வழக்கில் மனு தாக்கல் செய்து அதன்படி வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். மகாலட்சுமி, அன்புமணிக்கு திருமணம் செய்து வைத்தது யார் என்றால் சாம்பசிவம் தான். மேற்படி

திருமணம் முடியும் போது மீனாம்பாள் இருந்தாரா என்றால் இல்லை, அப்போதே காலமாகிவிட்டார்.

6) இவ்வழக்கு தாக்கல் செய்யும் போது, மகாலட்சுமி, அன்புமணியை இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் விவரம் தெரியாததால் சேர்க்கவில்லை. மேற்படி சிவகாமியம்மாளுக்கு வழக்கு சொத்து தவிர வேறு சொத்து உள்ளதா என்றால் நந்தவனம் ஒன்று உள்ளது. மேற்படி நந்தவனம் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 24 அல்லது 27 சென்ட் இருக்கலாம், அதனையும் பிரித்து விற்றுவிட்டார்கள், தற்போது கூட்டுப்பட்டாவில் உள்ளது.

7) மேற்படி நந்தவனத்தில் பலன்தரும் மரவகைகள் இருந்ததா என்றால் தென்னை மரங்கள் மட்டும் இருந்தது. மேற்படி நந்தவனத்தை பொறுத்து ஆனந்தாயிக்கும், இலால்குடி பச்சன்னபுரத்தை சேர்ந்த வைத்தி முத்துராஜக்கும் வழக்கு நடைபெற்றதா என்றால் இல்லை, மேற்படி வைத்தி முத்துராஜவின் மகன் மணிவேலுக்கும், சாம்பசிவத்துக்கும் இடையே வழக்கு நடைபெற்றது. மேற்படி வழக்கு என்ன ஆனது என்றால் அதன் முடிவு தெரியாது.

8) மேற்படி வழக்கு நடந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் என்னை மேற்படி வழக்கில் சாட்சியம் அளிக்க அழைத்ததால் தெரியும். மேற்படி நந்தவனமும் ஆனந்தாயிக்கு பாத்தியப்பட்ட நிலையில், வைத்தி முத்துராஜவின் மகன் மணிவேலுக்கும், சாம்பசிவத்துக்கும் இடையே நடைபெற்ற வழக்கில் என்னை கட்சி சேர்க்க நான் கோரவில்லை என்றால் நாங்கள் அப்போது சிறுவயது, விவரம் தெரியாததால்

கோரவில்லை.

9) இவ்வழக்கின் மேற்படி நந்தவனத்தை நான் தபசிலாக காட்டவில்லை என்றால் சரிதான். ஏன் இவ்வழக்கில் காட்டவில்லை என்றால் இவ்வழக்கு சொத்தை பொறுத்து பிரச்சனை ஏற்பட்டு பிரதிவாதிகள் அதில் கட்டுமானம் ஏற்படுத்த முயற்சித்ததால் இந்த சொத்தை பொறுத்து மட்டும் வழக்கு தாக்கல் செய்தேன். மேற்படி ஆனந்தாயிஅம்மாள் எப்போது இறந்தார் என்றால் 1979 ல். மேற்படி சாம்பசிவம் எப்போது இறந்தார் என்றால் தெரியாது. மேற்படி ஆனந்தாயிஅம்மாள் காலமாகி 20 வருடங்களுக்கு பிறகு, சாம்பசிவம் காலமானார் என்றால் இருக்கலாம்.

10) மேற்படி ஆனந்தாயிஅம்மாள் 1979 ல் காலமாகும் வரை இவ்வழக்கு சொத்தில் தான் குடியிருந்தார் என்றால் சரிதான். மேற்படி ஆனந்தாயிஅம்மாள் 1979 ல் காலமானபிறகு உடனே வழக்கு சொத்தில் பாகம் கோரி ஏன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் மேற்படி ஆனந்தாயிஅம்மாள் 1979 ல் காலமானபிறகு தான் பிரதிவாதிகள் வழக்கு சொத்திற்கு வந்தார்கள் வழக்கு சொத்தில் இருந்து கொள்வதற்கு அனுமதி கேட்டார்கள், நாங்களும் அனுமதித்து சாவியை கொடுத்தோம், முதலில் பிரச்சனை இல்லை, வீடு கட்டும்போது பிரச்சனை ஏற்பட்டதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

11) மேற்படி விவரத்தை நான் எனது வழக்குரையிலோ, முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான், தேவைப்படாது என்று நினைத்தேன். மேற்படி

ஆனந்தாயிஅம்மாள் குடியிருக்கும் வரை வழக்கு சொத்து கூரை வீடாக தான் இருந்ததது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கும், எனது வீட்டிற்கும் இடையே எவ்வளவு தொலைவு என்றால் 1/2 கி.மீ.க்கும் குறைவாக இருக்கும். மேற்படி நந்தவனத்திற்கும், எனது வீட்டிற்கும் இடையே எவ்வளவு தொலைவு என்றால் 1/2 கி.மீ.க்கும் குறைவாக இருக்கும்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கானது ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒப்பம்/– ப. கோபாலஅரசி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
இலால்குடி.

/உண்மை நகல்/

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.